ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2420/ 39 - 2025 ජනවාරි මස 22 වැනි බදාදා - 2025.01.22
2420/39 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

39 (1) ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்தல்

காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட 2015.12.07 ஆந் திகதிய 1944/6 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 199 ஆம் இலக்க 2015.12.03 ஆம் திகதிய கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்ட காணித்துண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கீழே விபரிக்கப்பட்ட காணித்துண்டின் இருப்பாட்சி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சார்பில் இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை. ஆகையால், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகம்கே தொன் லால் காந்த ஆகிய நான், காணி எடுத்தற் சட்டத்தின் 39 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் 2015.12.07 ஆம் திகதிய 1944/6 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 199 ஆம் இலக்க, 2015.12.03 ஆம் திகதிய இக் கட்டளையை இத்தால் இரத்துச் செய்கிறேன்.

கே.டி லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல. ; 4-3/10/2012/LRB/186
பிரதேச செயலாளர் இல. ; WGSWD&EIP/ACQ/DW/05
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
“மிஹிகத்த மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2025, சனவரி 08.


*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 537B, கொஹுவளை கிராம அலுவலர் பிரிவில், களுபோவில (பிரிவு இல. 3 - கொஹுவளை, தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபை எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2024.04.19 ஆந் திகதிய CO/DSO/2023/452 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித்துண்டின் எல்லைகள் :

**01. துண்டு "U" – கொட்டுவேகும்புர மற்றும் பிரயன்கரயாகேகும்புர - விஸ்தீரணம்: 0.2121 ஹெக்டயார்**

வடக்கு: துண்டுகள் T மற்றும் V ; கிழக்கு: துண்டுகள் V மற்றும் W ; தெற்கு: துண்டுகள் W மற்றும் X ; மேற்கு : துண்டுகள் X மற்றும் T.

EOG 01 - 0227

---

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2015, திசெம்பர் மாதம் 07 ஆம் திகதிய 1944/6 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 199 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிட்ட காணித் துண்டுகளை முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித்துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டடின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரமகே தொன் லால் காந்த ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை இக் கட்டளை மூலம் உரித்த நீக்குகின்றேன்.

கே.டி லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல. ; 4-3/10/2012/LRB/186
காணி எடுத்தல் உத்தியோகத்தர் இல. ; WGSWD&EIP/ACQ/DW/05

கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
“மிஹிகத்த மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2025, சனவரி 08.

அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 537B, கொஹுவளை கிராம அலுவலர் பிரிவில், களுபோவில (தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபை எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2023.03.15 ஆந் திகதிய, 520801 ஆம் இலக்க கடத்திறள் வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர்கள் விஸ்தீரணங்களைக் கொண்ட காணித்துண்டுகளின் எல்லைகள் :

**01. துண்டு இல. 8 – திக்தெனிய கும்புர, மில்லகஹஹேவிட்ட மற்றும் கொட்டுவே கும்புர - விஸ்தீரணம்: 0.0027 ஹெக்டயார்**

வடக்கு: தாள் 5 இல் துண்டு இல. 193 மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு இல. 9 ; கிழக்கு: தாள் 5 இல் துண்டு இல. 193 மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு இல. 9 மற்றும் 12 ; தெற்கு: துண்டு இல. 9,12,13 மற்றும் 7 ; மேற்கு : தாள் 7 மற்றும் தாள் 5 இல் துண்டு இல. 193.

**02. துண்டு இல. 12 – திக்தெனிய கும்புர, மில்லகஹஹேவிட்ட மற்றும் கொட்டுவே கும்புர - விஸ்தீரணம்: 0.0012 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இல. 8,9 மற்றும் 10 ; கிழக்கு: துண்டு இல. 9,10,11 மற்றும் 14 ; தெற்கு: துண்டு இல. 14 மற்றும்13 ; மேற்கு : துண்டு இல. 13,7 மற்றும் 8.

EOG 01 - 0228